★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 ஆனி: 11 றஜப்: 29 இதழ்: 133
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 25-6-79

RECEIVED 1979-6-25 PERIODICALS DIVISION

## மக்களின் தேவைகள்தான் எமக்கு முக்கியம்

[யாழ்ப்பாணம்]

"மனிதனின் ஆசைகள், அபிலாசைகள், தேவைகள் காலத்துக்குக்காலம் மாறுபடுவதுண்டு. மாறுபட்டாலும் மக்களின் தேவைகள் என்ன அவர்கள் எதற்காகப் போராடுகிறார்கள் என்பதை அதிகாரத்தில் இருக்கும் உத்தியோகத்தர்கள் நன்கு உணர்ந்து அதற்காகச் செயல்படவேண்டும்"

இவ்வாறு முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ நேற்று மாலை யாழ் மாநகரசபை உறுப்பினர்களால் தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் சிறப்புரையாற்றுகையில் கூறினர்.

## பாராட்டு விழாவில் லயனல்

யாழ் மாநகரசபை முதல்வர் திரு ஆர் விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற இப்பிரியாவிடையில் எம். பிக்கள், மாநகரசபை உறுப்பினர்கள், யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தன், நீதிபதிகள், சட்டத்தரணிகள், டாக்டர்கள்,

(6ம் பக்கம் பார்க்க)

# விண்வெளி ஆய்வுகூடத் துண்டுகள்

# இலங்கையிலும் விழுமா?

## நிலைமையை ஆராய உயர் அதிகாரிகள் குழு நியமனம்

(கொழும்பு)

**பூமியை நோக்கி மின்னல் வேகத்தில் வந்துகொண்டிருக்கும் அமெரிக்க விண்வெளி ஆய்வுகூடத்தின் உடைந்த துண்டுகள், இலங்கையையும் தாக்குமா? இப்பெரும் ஆபத்திலிருந்து ஈழத்து மக்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது.**

ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் பணிப்பின் மீது நியமிக்கப்பட்ட இக்குழுவில் முப்படைத் தலைவர்கள், விஞ்ஞானிகள், சுகாதார, போக்குவரத்து அமைச்சகங்களின் உயர் அதிகாரிகள், வெளி விவகார அமைச்சர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

உத்தேச 'பாதிப்பு' பற்றி வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீத் நேற்று கருத்து தெரிவிக்கையில், அமெரிக்க விண்வெளி ஆய்வு கூடத்தின் உடைந்த துண்டுகள் இலங்கையில் விழும் பட்சத்தில் இந்த ஆபத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க முன்னேற்பாடான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கிறதென்றும் இலங்கையில் இத்துண்டுகள் விழுவது அசாத்தியமானது என்றாலும் அரசாங்கம் இவ்விஷயத்தில் அசாரணமாக இருக்கமுடியாது என்றும் விண்வெளியிலிருந்து எப்பொருளும் இலங்கையின் எப்பகுதியில் விழுந்தாலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறினர்.

இதுசம்பந்தமாக வெளிவிவகார அமைச்சர் நேற்று இரு கூட்டங்களை நடத்தினர்.

## புங்குடுதீவு கண்ணகை அம்பாள் கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் 27ந் திகதி புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

வடபகுதியில் மிகப்பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கும் இவ்வாலயத்தில் முப்பத்து மூன்று குண்ட நவகுண்ட, பஞ்சகுண்ட, ஏககுண்ட உத்தமோத்தம மகாயாகம் நடைபெற்று மகாகும்பாபிஷேகம் நடத்தப்படும்.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் கடந்த 20ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

தென்னிந்திய திருக்கோலக்கா சீர்காழி சிவஸ்ரீ த. இராமநாதசிவாச்சாரியார் குடமுழுக்கு வைபவத்தில் சிறப்புக்குருவாக கலந்துகொள்வார். சிவஞானபானு சிவஸ்ரீ சு. பரமேஸ்வரக்குருக்கள், பிரதிஷ்டாகலாநிதி சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக்குருக்கள், சிவாகமகிரியாரத்தினம் சிவஸ்ரீ கு. இராமநாதக்குருக்கள். ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப. கணேசராசாக்குருக்கள் உட்பட யாழ் குடாநாட்டைச் சேர்ந்த 55 குருக்கள்மாரும் கிரியைகளை நிறைவேற்றுவர்.

கும்பாபிஷேக வைபவத்தை யொட்டி வருகைதரும் அடியார்களுக்கு அன்னதான ஒழுங்குகளும்செய்யப்பட்டுள்ளன.

[செ]

இளம் வாலிபர்கற்கு

**சிங்கப்பூரில் உடனடி வேலைவாய்ப்பு**

மிற்சுபுசி [MITSUBISHI] என்னும் சிங்கப்பூர் கப்பல் கட்டுமான தொழிற்சாலையில் லேபர் 'யொப்ஸ்' [LABOUR JOBS] வெற்றிடங்கள்.

இக்கம்பனியின் பிரதிநிதி செவ்வாய்க்கிழமை (26-6-79) காலை 8 மணி தொடக்கம் நேர்முகப்பரீட்சை நடத்தி தெரிவுசெய்வார்.

பாஸ்போர்ட் உள்ளவர்கள் இன்றே இங்கு பதிவுசெய்யவும்.

வெற்றிடங்கள் மிக சிலவே. உடனே தொடர்புகொள்க.

**குமரன் ரூரிஸ்ட் இன்**

67, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். (2858)

## நயினை உற்சவம் இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்தமாதம் 10ம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும்.

மகோற்சவத்தை முன்னிட்டு, யாத்திரிகர்களுக்கு கூடிய போக்குவரத்து வசதியும் அமுதசுரபி அன்னதான சபையினரின் இலவச உணவு வசதிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தத்திருவிழா 9ம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் தெப்பத் திருவிழாவும் நடைபெறும். (செ)

## யாழ். நவீன சந்தையில் இன்று சிகை அலங்கார நிலையங்களில் அறப்போராட்டக் குழுவினர்

[யாழ்ப்பாணம்]

தமிழ்மக்களிடையே நிலவும் சாதிப்பாகுபாட்டை முற்றாக நீக்கும் பொருட்டு சாவகச்சேரி அறவழிப்போராட்டக் குழு இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நவீனசந்தையிலுள்ள மூன்று சிகையலங்கரிப்பு நிலையங்களில் தமது தொண்டர்களை சிகையலங்காரத்தில் ஈடுபடுத்தும்.

கோப்பாய் தொகுதி எம் பி திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை, திருக்குறள் முன்னணிக் கழகச் செயலாளர் திரு. வண்ணை ஆனந்தன், மட்டக்களப்புத் தொகுதி கூட்டணி அமைப்புச் செயலாளர் திரு. காசி ஆனந்தன், ஈழவிடுதலை இயக்க பிரமுகர், திரு. த. முத்துக்குமாரசாமி, செல்வா அறங்காவல் குழு செயலாளர் திரு. க. சச்சிதானந்தன் ஆகியோர், பயிற்றப்பட்ட சிகை அலங்கரிப்பு தொழிலாளராக இன்று செயல்புரிவர்.

இச்சேவை தொடர்ந்து கிராமமட்டத்தில் விஸ்தரிக்கப்படவுள்ளது. சாவகச்சேரித் தொகுதியில் அறவழிப் போராட்டக் குழுவினர் ஜூலை 9ந் திகதி சிகை அலங்கரிப்பில் ஈடுபடவிருப்பதாக தெரிகிறது. [செ]

## வழிப்பறிக் கொள்ளை:

## சந்தேகநபர்கள் மூவரும் அடையாளம் காட்டப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர் முனீஸ்வரன் வீதியில் நடைபெற்ற 470 ரூபா வழிப்பறி சம்பந்தமாக நடைபெற்ற அடையாள அணி வகுப்பில் சந்தேகநபர்கள் மூவரும் அடையாளம் காட்டப்பட்டனர்!

யாழ் நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு எஸ் அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின்போதே சந்தேகநபர்கள் அடையாளம் காட்டப்பட்டனர்.

கடந்த ஏப்ரல்மாதம் 28,ம் திகதி பலாலி வரணியைச் சேர்ந்த தம்பிநடராசா என்பவர் யாழ் முனீஸ்வரன் வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது மூவர் தம்மிடம் வந்து நூறுரூபாவை மாற்றித்தரும்படி தம்மைக்கேட்டதாகவும் காசை மாற்றிக் கொடுப்பதற்காகத் தன்னிடமிருந்த பணத்தை எடுத்தபோது மூவரும் தன்னிடம் இருந்த 470 ரூபா பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாகவும் யாழ்பொலிஸில் புகார் செய்யப்பட்டதை தொடர்ந்து யாழ் குற்றத் தடுப்புப் பொலிஸைச் சேர்ந்த சார்ஜண்ட் அன்ரனி, கான்ஸ்டபிள்கள் எஸ். ஜோர்ஜ், எஸ். குணரத்தினம் ஆகியோர் சந்தேகத்தின்பேரில் ஜோசெப் துரைராசா, பொன்னுச்சாமி வேலுச்சாமி, பெரியதம்பி என அழைக்கப்படும் அன்ரனிப்பிள்ளை ரவீந்திரன் ஆகியோரைக் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்து அடையாள அணிவகுப்பின்போது ஆஜர் செய்தனர்.

அடையாள அணி வகுப்பில் மூவரையும் அடையாளம் காட்டிய தம்பி நடராசா, "முதலாம் எதிரி ஜோசெப் துரைராசா 470 ரூபாவை வழிப்பறி செய்தவரென்றும், இரண்டாம் எதிரி பொ. வேலுச்சாமி பொலிசுக்குப் போவேண்டாம் என்று பய

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### பயிற்சி

மோட்டார் மெக்கானிக் டிப்பிளோமா விசேட 3 மாத பயிற்சி 10-07-1979 ஆரம்பமாகவுள்ளது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B, மொடிசாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2736

### விற்பனைக்கு

கொட்டடி, சீனிவாசகம் வீதியில் ஆறு (6) பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; நா. ரவீந்திரன், 276, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2807

### WANTED

Vacancy exists for an experienced Store-keeper to be in charge of our Vavuniya Branch. Security Rs. 5000/- Salary Rs 400/-plus 1/2% commission on Turnover. Apply in own handwriting on or before 30-6-79. Autos Limited, 190, Hospital Road, Jaffna. 2847

### ஆசிரியர் தேவை

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர வகுப்புகளில் தாவரவியல், விலங்கியல் கற்பிப்பதற்கு வசதிக்கட்டணத்தில் நியமிப்பதற்கு இரு ஆசிரியர்கள் தேவை. தகுதியுடையவர்கள் 1979-06 30 ஆம் திகதிக்கு முன்பாக அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

அதிபர்
2851

### அச்சுவேலி கிராமசபை

## விளம்பரம்

அச்சுவேலி கிராமசபை எல்லைக்குள் உள்ள ஆதனங்களின் 1979ம் ஆண்டு மதிப்பீட்டுவரி இடாப்புக்கள் இன்றிலிருந்து 31-07-1979ம் திகதி வரை எனது கந்தோரில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. வரியிறுப்பாளர்கள் கந்தோர் நேரத்தில் பார்வையிட்டு ஆட்சேபனைகள் இருந்தால் 15-8-1979ந் திகதிக்கு முன் எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும்.

நீ. ப. ஜெகநாதன்,
நிர்வாகஸ்தர்,
கி. ச. அச்சுவேலி.

2852

### கல்வி

ஆங்கில இலக்கண இலக்கியம் (Emma Mc Beth) ஆங்கிலப்பேச்சு (Spoken English) வீடுகள் சென்று கற்றுக் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2814, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 2814

### பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ/து) பருத்தித்துறை

## பதவி வெற்றிடம்

### லொறிச்சாரதி

மேற்படி பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. (எமது சங்க எல்லைப் பரப்பினுள்ளே வசிக்கும் பிரஜைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்).

விண்ணப்பப் படிவங்களைத் தமது விலாசம் குறிப்பிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான தபாலுறையை அனுப்பியோ அல்லது எமது அலுவலகத்தில் நேரடியாகவோ வந்துபெற்றுக்கொள்ளலாம்.

(1) வயது: 25க்கும் 45க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) தகைமைகள்: தொழில் இலாகா சம்பள நிர்ணய சபை சட்டங்களுக்கு அமையவும், 8ம் தரம் தமிழ்க் கல்வித் தகைமையும் பெற்றிருத்தல் வேண்டும். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு, விண்ணப்பப் பத்திரம் பதிவுத்தபால் மூலம் "தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு 6-7-79ம் திகதிக்குப்பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல்வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "லொறிச்சாரதிக்கான விண்ணப்பம்" என எழுதப்படுதல் முக்கியம்.

தலைவர்,
பரு. ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
20-06-79.

2853


### அரசு காணிவழங்கும் போது

# இளம் விவசாயிகள் கழகத்தவருக்கு முன்னுரிமை

### விவசாயஇலாகா பிரதிப்பணிப்பாளர் தகவல்

[யாழ்ப்பாணம்]

"படித்த வாலிபர்கள் குடியேற்றத்திட்டங்களில்" காணி வழங்கப்படும்போது இளம் விவசாயிகள் கழக உறுப்பினர்களுக்கே வழங்கப்படவுள்ளன. விவசாய அமைச்சர் இந்த நாட்டிலுள்ள இளைஞர்களை விவசாயத்தில் ஈடுபடுத்தி அதன்மூலம் இளைஞர்களுக்கு போதிய வருமானத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நல்ல திட்டங்களை வகுத்துள்ளார்".

இவ்வாறு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற யாழ். மாவட்ட இளம் விவசாயிகள் கழக விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய விவசாயப்பிரதிப்பணிப்பாளர் திரு. எல். ஆர். சேனரத்ன பேசுகையில் கூறினார்.

யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. எஸ். சிவமுத்துலிங்கம் தலைமையில் நடைபெற்றஇவ்விழாவில் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரெத்தினம், மானிப்பாய் இந்துக்கல்லூரி உபஅதிபர் திரு. கே. தனபாலசிங்கம் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தனர். திரு. எஸ். சிவமுத்துலிங்கம் இளம் விவசாயிகள் கழகக்கொடியை ஏற்றிவைத்தார். பிரதிப்பணிப்பாளர் சேனரத்ன தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

திரு. சேனரத்ன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

குண்டசாலை விவசாயப் பயிற்சி நிலையம்போன்ற விவசாயப் போதனா நிலையங்களுக்கு மாணவர்களைத்தெரிவு செய்யும்போது ஐம்பது சதவீதமானவர்கள் இளம் விவசாயிகள் கழகங்களிலிருந்தே தெரிவுசெய்யப்படுவர்.

"இந்தநாட்டில் உள்ள இளைஞர்கள் கல்விகற்றும் போதிருந்தே விவசாயத்தில் ஈடுபடுத்த விரும்பியே ஒவ்வொரு இடத்திலும் இளம் விவசாயிகள் கழகங்கள் உண்டாக்கப்பட்டது. இதில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து தமது வாழ்க்கையில் சுயமாகச் சம்பாதிக்க ஒவ்வொரு இளைஞர்களும் முயற்சிக்கவேண்டும்" சுயமுயற்சியில் கூடுதலான பணத்தைச்சம்பாதிக்கக் கூடியதாக இருந்தால் இளைஞர்களுக்கு அரசாங்க உத்தியோகங்களில் நாட்டம் ஏற்படமாட்டாது.

யாழ். மாவட்டத்திலுள்ள 35 இளம் விவசாயிகள் கழகங்கள் பங்குபற்றிய விவசாயப் பொருட்காட்சியை பிரதிப் பணிப்பாளர் சேனரத்ன திறந்துவைத்துப் பார்வையிட்டார்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில் இருந்து சுமார் பதினைந்துக்கு மேற்பட்ட விவசாயக் கழகங்கள் பங்குபற்றிய ஊர்திகள் விவசாய அணிவகுப்பு மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு ஊர்வலமாகச்சென்றது.

யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. எஸ். சிவமுத்துலிங்கமும் பேசினார். [கொ-கு]

### அடையாறு லக்ஷ்மணன் யாழ். வருகிறார்

[யாழ்ப்பாணம்]

பிரபல நாட்டிய ஆசிரியர் அடையாறு கே. லக்ஷ்மணன் யாழ்ப்பாணம் வருகிறார்.

கைதடி சைவச்சிறுவர் இல்ல வளர்ச்சிநிதிக்காக குமாரி ஜெயசேனரி நகுலேந்திரனின் பரதநாட்டிய நிகழ்ச்சிக்கு நட்டுவாங்கம் செய்வதற்காகவே சென்னை நுண்கலைக் கல்லூரி அதிபர் "பரத சூடாமணி" அடையாறு லக்ஷ்மணன் யாழ்ப்பாணம் வருகிறார்.

மேற்படி நிகழ்ச்சி இம்மாதம் 30-ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. நிகழ்ச்சிக்கு யாழ். மேயர் திரு ஆர் விசுவநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். திரு. லக்ஷ்மணன் மூன்று நாட்கள் யாழ்ப்பாணத்திலிருப்பார் என்று தெரிகிறது.

### மாவட்ட அமைச்சர் மன்சூர்

# நாளை மு ல் தடவையாக கரவெட்டிக்கு விஜயம்

[உடுப்பிட்டி]

யாழ் மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் நாளை செவ்வாய்க்கிழமை கரவெட்டிக்கு முதல் தடவையாக உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொள்ளவுள்ளார்.

உடுப்பிட்டித் தொகுதியில் கன்பொல்லையில் அமையவிருக்கும் மாதிரிக்கிராமத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைக்கு முகமாகவே கரவெட்டிக்கு மாவட்ட அமைச்சர் விஜயம் செய்கிறார்.

மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் கன்பொல்லை மக்களால் நெல்லியடியிலிருந்து மாதிரிக் கிராமம் வரை பவனியாக அழைத்துச் செல்லப்பட்டு வரவேற்பளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இம் மாதிரிக் கிராம அடிக்கல் நாட்டுவிழாவில் கலந்து கொள்ளும்படி தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் கலந்து கொள்வார்களா என்பது தெரியவில்லை.

காலை 8-45 மணிக்கு நெல்லியடியிலிருந்து கன்பொல்லை கிராமத்துக்கு ஜனாப் ஏ. ஆர். மன்சூர் அழைத்துச் செல்லப்படுவார். 9-30க்குச் சம்பிரதாய முறைப்படி மாவட்ட அமைச்சர் வேலையை ஆரம்பித்து வைப்பார். 9-45க்கு யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். [அ]

# இரு கோவில்களில் ஓர் இரவில் திருட்டு

[யாழ்ப்பாணம்]

மாகியப்பிட்டியில் ஒரே இரவில் அருகருகே இருந்த இரு கோவில்களில் பல பொருட்கள் திருட்டுப்போயுள்ளன.

மாகியப்பிட்டி அங்கணம்மைக்கடவை கண்ணகை அம்பாள் கோயிலும் அதன் அருகே உள்ள மீனாட்சிஅம்மன் ஆலயத்திலுமே திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கண்ணகை அம்மன் கோயிலில் கதவைப்பிரித்து நுழைந்த திருடர்கள் மூலவிக்கிரகத்தைப் பெயர்த்தெடுத்து அதனடியிலிருந்த விலையுயர்ந்த யந்திரத் தகடு, வெள்ளிகண்மலர், சிலம்பு மற்றும் சில விக்கிரகங்களுக்கு அடியிலிருந்த யந்திரத் தகடுகளையும் திருடிச்சென்றுள்ளனர் எனப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களே திருட்டுப்போயுள்ளன.

மீனாட்சி அம்மன் ஆலயத்தில் கூரையைப்பிரித்து உட்புகுந்ததிருடர்கள் மூலவிக்கிரக யந்திரத்தகடு வைரவர் விக்கிரக யந்திரத்தகடு, பெட்ரோமக்ஸ் விளக்கு ஆகியவற்றைத் திருடியுள்ளர்.

சுமார் 2 ஆயிரம் ரூபாபெறுமதியான பொருட்கள் திருட்டுப்போயுள்ளன. சுன்னாகப் பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். [இ]

### "ஆசிரியர்களின்

# அரசியல் இடமாற்றத்தை ரத்துச் செய்க"

[யாழ்ப்பாணம்]

"புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மட்டக்களப்புப் பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கு வேறு மாவட்டங்களிலிருந்து அரசாங்க அதிகாரிகளையும் தொழிலாளர்களையும் ஆசிரியர்களையும் தருவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களை அரசியல் காரணமாக வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கு மாற்றம் செய்துள்ளது கவலைக்கிடமானதொரு சம்பவமாகும்".

இவ்வாறு தெரிவிக்கும் அவசரத்தந்தி ஒன்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு டி. எஸ். கே. வனசிங்கா கல்வி அமைச்சருக்கு அனுப்பியுள்ளார். அவர் தமது தந்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"திருவாளர்கள் எஸ். முருகேசபிள்ளை, எஸ். முருகப்பா கே. சோசுந்தரம், எஸ். தேவராசா, எஸ். மாணிக்கவாசகர் வி, ரி. குமாரசாமி ஆகிய ஆறு ஆசிரியர்களும் இவ்வாறு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

"ஆசிரியர்கள் தவறு செய்திருந்தால் அவர்களை விசாரணைக்குட்படுத்தி அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படுமிடத்து அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்குவதுதான் நீதி அதை விடுத்து இப்படித் திடீரென மாற்றம் செய்து ஆசிரியர்களைப் பழிவாங்கியது கவலையளிக்கிறது. இவ் இடமாற்றங்களை நிறுத்தி ஆசிரியர்களுக்கு நீதியை வழங்குங்கள்" [கோ-அ]


# தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக நிறுவப்பட்ட எவர் சில்வர் (STAINLES STEELWARE) தொழிற்சாலையில் கீழ் காணும் வேலை வாய்ப்பு உண்டு. தகுதியும் அனுபவமும் உள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தராதரப்பத்திரங்களுடன் 30-6-79 இற்குமுன் விண்ணப்பிக்கவும்.

அனுபவத்திற்கும் தராதரத்திற்கும் ஏற்க சம்பளம் வழங்கப்படும்.

**பவர்பிறெஸ் ஒப்பறேற்ரேர்ஸ்**
Deep Drawing Power Press

**லேத் ஒப்பறேற்றேர்ஸ்**
Heavy Lathe Operators

**பயிற்சி பெற விரும்புவோர்**
15 வயதிற்கும் 20 வயதிற்கும் உட்பட்ட ஆண்கள் மாத்திரம்.
Trainees (Boys) under the age group 15 to 20

## சில்வர் ஸ்ரார் இன்டஸ்றீஸ்

120, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# 'இனப்பிரச்னைக்குக்காரணம் பொருளாதாரப் பிரச்னையே

## இதனைச்சாடவேண்டும்' என்கிறார் 'சண்'

[நெல்லியடி]

"தமிழ் பேசும் தொழிலாளி விவசாயிகளும், சிங்கள தொழிலாளி விவசாயிகளும் ஒருவரை யொருவர் பரஸ்பரம் புரிந்து கொண்டு, தமது பொது எதிரிமீது தாக்குதலைத் தொடுக்கவேண்டும். இத் தாக்குதல் மூலமே தமிழினத்தின் பிரச்னைகளுக்கு தீர்வு காணமுடியும்"

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. என். சண்முகதாசன், வதிரி தமிழ்மன்றத்தில் 'தமிழ் மக்களின் விடுதலைப்பாதை எது'' என்னும் பொருள் பற்றி உரையாற்றுகையில், மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

"தமிழினத்திற்கும் சிங்கள இனத்திற்கும் பகைமை வளரவும், அதனைத் தொடர்ந்து சிற்சில சம்பவங்கள் நடைபெறவும் பொருளாதாரப் பிரச்னையே அடிப்படைக்காரணமாகும். பொருளாதாரப் பிரச்னையிலிருந்து மக்களைத் திசைதிருப்பவே பாராளுமன்ற அரசியலில் இனக்குரோத சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. ஆகவே இவ்விரு இனமக்களும் பொருளாதாரப் பிரச்னைக்கு எதிராகப் போராட முன்வர வேண்டும். பொருளாதரப் பிரச்னைக்குத் தீர்வு காணப்படுமானால் இனப் பிரச்னைக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும். சமுதாயத்தின் பொது எதிரியான இப் பிரச்னையினை இல்லாதொழிப்பதன்மூலமே தமிழினத்தின் பிரச்னைக்குத் தீர்வுகாணமுடியும்.

### தமிழ்த் தலைவர்களே பொறுப்பு

"தமிழினத்தின் இன்றைய நிலைக்கு தமிழ்த் தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும். பெரும்பான்மையினத்து மக்களின் விருப்பத்திற்கு எதிராகவே தமிழ்த் தலைவர்கள் கடந்த காலங்களில் தமது அரசியலை நடத்தி வந்துள்ளார்கள். சிங்களப் பெரும்பான்மை இனம் சுதந்திரமாக வாழவிரும்பியபோது தமிழ்த் தலைவர்கள் முட்டுக்கட்டையாகஇருந்துள்ளார்கள். சுதந்திரப் போராட்ட நேரத்தின் பின்பும் சிங்கள மக்களுடன் தமிழர் ஐக்கியப்பட்டு எதனையும் செய்யவில்லை. உதாரணமாக பஸ் தேசியமயம், பாடசாலை சுவீகரிப்பு, அந்நிய ராணுவத் தளங்களை அகற்றல் ஆகியவற்றில் தமிழ்த் தலைவர்கள் சிங்கள அரசாங்கங்களை எதிர்த்துள்ளார்கள். இந்நிலை தமிழரைப் பற்றிச் சிங்கள மக்கள் மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயத்தினை ஏற்படுத்தி விட்டது. இம்மக்களின் தப்பபிப்பிராயத்தினைப் போக்க தமிழ்மக்கள் முயற்சி செய்யவேண்டும். சிங்கள மக்கள்மத்தியிலுள்ள தொழிலாளிகளுடனும் விவசாயிகளுடனும் எமது பிரச்னையை எடுத்துச் சொல்ல வேண்டும். ஆனால் இந்தத் தைரியம் தமிழ்த் தலைவர்களுக்குக் கிடைக்கவே கிடையாது. அப்பணியினை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியினராகிய நாமே செய்து வருகின்றோம்'' [அ]

---

### மக்கள் கருத்து

## நாவலரும் பண்டிதமணியும்

1-7-79 ஆனி உத்திரதினம் கூடிய பௌர்ணை ஒய்வு இந்நன்னாளில் யாழ். பல்கலைக் மேதைகளும் பண்டிதர்களும், வித்துவான்களும் - கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பழைய மாணவ மாணவியர்கள் அனைவரும் - திரண்டு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் குழுமி பண்டிதமணியின் ஜென்மபூமியாகிய தென்மராட்சி மண்ணில் ஒரு பாராட்டுவிழாவினை எடுக்கின்றனர். அன்று பண்டிதமணி அவர்கள் தயாரித்த "ஆறுமுக நாவலர்'' என்ற சிறந்த ஒரு அநுபந்தத்தோடு கூடிய 27 சமயக்கட்டுரைகள் (200பக்கங்கள்) கொண்டநூல் நாவலர் நூற்றாண்டு நினைவு மஞ்சரியாக வெளியிட்டு விநியோகிக்கப்படும். அவை யாம் முன்னொருபோதும் கண்டறியாதன-கேட்டறியாதன கருத்தாழமிக்க கருவூலம்- என்ற இச்செய்தியை தங்கள் ஈழநாட்டில் விழாச்செயலாளர் வித்துவான் பொ கந்தையனார் விடுத்தசெய்தியில் அறிந்து பூரித்தோம். மகிழ்ந்தோம்.

உயர்திரு மகாலிங்கசிவம், உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, புலவர் ந. ச. பொன்னம்பலபிள்ளை போன்ற மேதைகளைத் தந்த தென்மராட்சித் தமிழன்பர்கள் சிறந்த ஒரு பல்கலைக்கழகமாக எதிர்காலத்தில்பரிணமிக்க விருக்கும் இந்துக்கல்லூரியில் இவ்விழாவினை எடுப்பதுமிகவும்பொருத்தம்.

இன்றும் புராணப்படனமும் ஆசார வாழ்வும் அறமும், செழித்துவரும் இப்புண்ணிய பூமியில் உள்ள நாவலரின் அபிமானிகள் தமது மைந்தருக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுநாவலர் என்ற பெயர்சூட்டி மகிழ்ந்ததுண்டு. ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் சிலை நல்லூருக்கு பவனிசென்றபோது - சாவகச்சேரி இந்துக்கல்லூரி வாசலில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்னும் பெயரையுடைய ஒரு அச்சிலைக்கு மலர்மாலைசூட்டிய சம்பவம் பலருக்கு இன்றும் நினைவிருக்கும். நாவலர் ஐயாவின் வாரியாக விளங்கும் கலாநிதி ஐயாவின் பாராட்டு விழா சித்திக்க திருவருளை வேண்டுவோமாக.

ஆசிரியமணி
இ. த. சுப்பிரமணியம்

---

## சுருவில் ஐயனார் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

சுருவில் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 26ந் திகதி செவ்வாய்க்கிழமை, கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துநாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

வேட்டைத்திருவிழா அடுத்த மாதம் 3ந் திகதியும், இரதோற்சவம் 4ந் திகதியும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. [செ]

---

## "சகலரும் ஒன்றுபட்டுழைக்க வேண்டும்''

(கிளிநொச்சி)

''மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டுழைத்தால் எல்லா வசதிகளும் கொண்ட பூமிபரந்த இடவசதியுமுள்ள கிளிநொச்சியின் மிகப்பழமை வாய்ந்த உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தை சிறந்து விளங்கச் செய்யலாம்.''

இவ்வாறு கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு நா. குருநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டியை கிளிநொச்சி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. திசாநாயக்க பாடசாலைக்கொடியை ஏற்றி வைத்து ஆரம்பித்துவைத்தார். திருமதி ஆனந்தசங்கரி பரிசில்கள் வழங்கினார்.

சோழன், பாண்டியன், சேரன் இல்லங்கள் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றன. [கா. கு]

---

## 79 பேருக்கு சிபார்சு

(புலோலி)

யாழ். மாவட்டத்திலுள்ள சொந்தக் காணியற்ற 1000 குடும்பங்களுக்கு பலை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சொந்தமாகக் காணி வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய வடமராட்சி வடக்கு கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காணிகோரி 250 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருந்தபோதும், நேர்முகப் பரீட்சை நடாத்திய உதவி அரசாங்க அதிபர் வை. வேலும்மயிலும் 79 விண்ணப்ப தாரிகளை மே தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் எனச் சிபார்சு செய்துள்ளார். [அ]

---

## 30-ம் திகதி திறக்கப்படும்

[உடுப்பிட்டி]

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பத்தாயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள புதிய திறந்தவெளி அரங்கு எதிர்வரும் 30-ம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் இப் புதிய திறந்த வெளியரங்கைத் திறந்து வைப்பார்.

யாழ். மாவட்டத்தில் புதிதாக பதிவைக்கப்பட்டு உருவாககப்பட்ட திறந்தவெளியரங்கு இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

---

## மாணவரிடையே பாராயணப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இந்து மாணவர்களிடையே பஞ்சபுராண பாராயணத்தை ஊக்குவிக்குமுகமாக வண்ணை வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான கல்வி, கலாச்சாரப் பகுதி ஒரு போட்டியை நடாத்தவிருக்கிறது.

இதற்கான அறிவித்தல்கள் யாழ். நகரிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. போட்டிகள் ஆலய வருடாந்த உற்சவத்தின்போதும், எதிர்வரும் நவராத்திரி விழாவின்போது பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது. (செ-கு)

---

"கருத்தடைசெய்வதன் மூலம்

# சிறந்தசமுதாயம் உருவாக்க

## எந்தப் பெண்ணும் தயங்கக்கூடாது''

### குடும்பத்திட்ட கருத்தரங்கில் டாக்டர் நிர்மலா

[யாழ்ப்பாணம்]

"பெண்களின் உடல்நிலை, எந்நிலையிலும் பாதிப்படையாத நிலையில் நல்ல ஆரோக்கியமான குடும்பத்தை உருவாக்குவதற்கு கருத்தடைச் சிகிச்சை செய்யப்படுகின்றன. ஒவ்வொரு தாயும் ஒவ்வொரு மகப்பேற்றிலும் பதினைந்து குருதி நிறையினை இழக்கிறாள். ஆனால் அளவான குழந்தைகளுடன் ஒரு பெண் கருத்தடை செய்து கொண்டால் அவளது உடல்நிலை எவ்வகையிலும் பாதிப்படைவதில்லை; சந்தோஷமும் குறைவதில்லை.

இவ்வாறு யாழ். அரசினர் வைத்தியசாலை மகப்பேற்றுத் துறை வைத்திய கலாநிதி திருமதி நிர்மலா பசுபதி நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற இலங்கை கருத்தடை செயல்பாடு இயக்க வடபிராந்தியக் கருத்தரங்கில் "பெண்களுக்கான கருத்தடை" என்னும் தலைப்பில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கருத்தரங்கை யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி மங்கலவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

வைத்தியகலாநிதி திருமதி பசுபதி தொடர்ந்து உரையாற்றுகையில், பெண்களுக்கான கருத்தடைகள் அவர்களது பூரண விருப்பின் பேரிலேயே செய்யப்படுகின்றன. கருத்தடை சத்திரசிகிச்சையினை மகப்பேறு நடைபெறும் போது இலகுவாக செய்து கொள்ள முடியும். விரும்புகின்றபோது மீண்டும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளும் முறையிலும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளலாம். கருத்தடை செய்து கொள்வதன் மூலம் ஒரு பெண் எந்தவகையிலும் தன் உடல் பாதிப்படையும் என அஞ்சத்தேவையில்லை. கருத்தடை செய்வதன்மூலம் ஒரு நாட்டின்சிறந்த சமுதாய அமைப்பினை உருவாக்க எந்தப் பெண்ணும் தயங்கக் கூடாது' என்றார்.

வைத்திய கலாநிதி சிவானந்தன் பேசுகையில், இன்று குடும்பக் கட்டுப்பாடுபற்றிய பிரசாரம் கிராமமட்டத்திலே தேவைப்படுகின்றது. இந்த இயக்கத்தில் உழைத்துவரும் ஒவ்வொருவரும் தமது முழுச் சக்தியையும் இப்பணிக்கு செலவிட்டு வெற்றி காண வேண்டும். இதற்கு தவல்தொடர்பு சாதனங்கள் தமது பங்களிப்பை பூரணமாகச் செய்ய வேண்டும்" என்றார்.

வைத்திய கலாநிதி திருமதி ச. ஆர். அமரசேகரா தோட்டப்பகுதியில் குடும்ப நலம்" என்னும் தலைப்பில் உரையாற்றுகையில், தோட்டப்பகுதியில் இன்று அதிகமான குடும்பங்கள் குடும்பக்கட்டுப்பாடு சத்திரசிகிச்சை செய்துள்ளன. காலப்போக்கில் அங்கு நல்ல பலன் கிடைக்கும். பயிற்றப்பட்ட வைத்தியநிபுணர்களை அங்கு அனுப்பிவைத்தால் விரைவில் பூரணபலம் கிட்டும் என்றார்.

வைத்திய கலாநிதி எம். மகேஸ்வரன் 'கருத்தடையும் சட்டங்களும்' என்னும் தலைப்பில் உரையாற்றுகையில், மணமான தம்பதிகளின் சுயவிருப்பின் அடிப்படையில் கருத்தடை சட்டங்களுக்கு அமைவாக கருத்தடை சத்திரசிகிச்சை செய்யப்படுகிறது" என்றார்.

கருத்தரங்கை ஆரம்பித்து வைத்துப் பேசிய யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி பேசுகையில் இவ்வியக்கம் வடபகுதியில் சிறப்பான சேவையாற்றுமென்று தான் பூரணமாக நம்புகிறேன். கருத்தரங்கு சகல துறையினருக்கும் நல்ல பயனளிக்குமென வாழ்த்துகிறேன்" என்றார்.

கருத்தரங்கில் யாழ். பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ். சிவஞானசுந்தரம், வைத்திய கலாநிதிகள் எஸ். பொன்னம்பலம், பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம், ஜெயா பசுபதி, எஸ். சேனாதிராசா உட்படப் பலர் உரையாற்றினர். செயல்முறை விளக்கப் படங்களும் காட்டப்பட்டன. [செ-கு]

---

## காணி வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கைதடியில் சொந்தமாக காணியில்லாத 137 சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு உடன் காணி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பதில் அரசாங்க அதிபர் திரு. ஜெகநாதனிடம் யாழ். பல்கலைக்கழக மாணவர் குழுவொன்று இன்று கோரிக்கை விடுத்தது.

இந்த வீடற்றவரின் பட்டியல் ஒன்றையும் இக்குழு திரு. ஜெகநாதனிடம் கையளித்தது.

---

## புதியமுறைசிகிச்சை

கொட்டிங்கன் ஜூன் 24

பயங்கரநோயாகிய இருதயக் கோளாறுக்குப் பரிகாரமாக ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் கொட்டிங்கன் நகரைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் ஒருவர் ஒரு புதிய சிகிச்சை முறையைக் கண்டு பிடித்துள்ளார்.

டாக்டர் கே. பி. ரென்ற்ரோப் என்ற இந்த நிபுணரின் புதிய சிகிச்சையின் படி ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்ட ஒருசில மணி நேரங்களில் அவரின் இரத்த நாடியினுள்ளே ஒரு நுண் கம்பி செலுத்தப்பட்டு எக்ஸ்-றே திரைப்படம் ஒன்றின் மூலமாக இரத்தம் தடைப்பட்டுள்ள இடம் கண்டு பிடிக்கப்பட்டு நாடியின் தடைப்பட்டுள்ள இடம் திறந்துவிடப்படும்.

இச்சிகிச்சை வெற்றிகரமாக அமைந்தால் மாரடைப்புக்கு இதுவே நடைமுறை சிகிச்சையாக மாறலாம் எனினும் இதுபோன்ற சிகிச்சை முறைகளை தகுந்த சாதனங்களைக் கொண்ட இருதய சிகிச்சை நிலையங்களில் மட்டுமே மேற்கொள்ள முடியும். [கு]

---

## நயினை 1ம்திருவிழாவில் அன்னதானம்

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய கொடியேற்ற தினமான, இன்று திங்கட்கிழமையும் நயினை அமுதசுரபி, அன்னதான மடத்தில் அன்னதானம் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. படகுச் சேவையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனதாக்கட்சியிலிருந்து

# முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜ்நாராயண் ராஜினாமா!

புதுடில்லி, ஜூன். 24
இந்திய முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. ராஜ் நாராயண் ஜனதாக் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

பிரதமர் திரு தேசாயின் அதிகார துஷ்பிரயோகம், ஜனதாக் கட்சித்தலைவர் திரு சந்திரசேகரின் செயலற்றதன்மை என்பனவற்றைக் காரணம் காட்டிய திரு ராஜ் நாராயண் தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே தாம் இந்தமுடிவை எடுத்ததாக பத்திரிகை நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினார். ஜனதாக்கட்சியின் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட இந்திய இயக்கமொன்று தற்போது செல்வாக்குப் பெற்றுவருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அண்மையில் திரு நாராயண் மீது சுமத்தப்பட்டிருந்த இரண்டு குற்றச்சாட்டுக்களையும் விசாரணைசெய்த ஜனதாக் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக்குழு அவரை குற்றவாளியாகக் கண்டு தேசிய நிர்வாகக் கமிட்டியிலிருந்து வெளியேற்றியது.

64 வயதுடைய திரு நாராயண் கடந்த பொதுத் தேர்தலில் இந்திரா காந்தியைத் தோற்கடித்தவர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (கு)

## "ஈரான் மன்னர் ஷாவுக்கு எகிப்தில் புகலிடம் அளிக்கவேண்டும்"

### பாராளுமன்றத்தில் ஜனாதிபதி சாதாத்

கெய்ரோ, ஜூன் 24
"ஈரானிலிருந்து வெளியேற்றப் பட்ட ஈரானிய மன்னர் ஷாவுக்கு எகிப்தில் புகலிடமளிக்கத்தக்கவகையில் எகிப்து பாராளுமன்றம் தீர்மானமொன்றை நிறைவேற்றவேண்டும்" என்று எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் வேண்டுகோள்விடுத்தார்.

இஸ்லாம், மனிதப்பண்பு, நாகரிகமென்பவற்றை மதித்து நாம் அவருக்குப்புகலிடமளிக்க வேண்டியது அவசியமென்று திரு சதாத் தெரிவித்தபோது சபையில் இருந்தவர்கள் பலத்த கரகோஷத்துடன் வரவேற்றனர்.

மன்னர் ஷா இப்போது மெக்ஸிக்கோவில் தங்கியிருக்கின்றபோதும் அது நிரந்தரமானஇடமில்லையெனவும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எகிப்தில்புகலிடமளிக்க வேண்டியது எமது கடமை என்றும் திரு சதாத் தெரிவித்தார் (கு)

## திருமதி காந்தி பாரிஸ் செல்லத்தடை!

புதுடில்லி, ஜூன். 24
முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பாரிஸுக்குச் செல்ல அரசு அனுமதி மறுத்துள்ளது.

இத்தகவலை திருமதி காந்தியே இன்று தெரிவித்தார்.

சில வழக்குகளில் தாம் சம்பந்தப்பட்டிருப்பதாகக் காரணங்கூறியே தமக்கு பாரிஸ் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி காந்தி நிருபர்களிடம்கூறினார். (கு)

ஓடிக்கொண்டிருந்த

# ரயிலில் ஏற முற்பட்ட முன்னாள் ரயில் சாரதி பலி!

கிளிநொச்சி,
ஓடிக்கொண்டிருந்த ரயிலில் ஏற முற்பட்ட முன்னாள் ரயில் சாரதி ஒருவர் ரயில் சில்லுகளுக்குள் அகப்பட்டு பலியானார். இவர் ஐந்து பிள்ளைகளுக்குத் தந்தை.

யாழ்ப்பாணம்சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த ஏ வி சோமசேகரம் (வயது 40) என்பவரே ரயில் சில்லுகளுக்குள் சிக்குண்டு இருகால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டபின் மரணமானார்.

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் நிகழ்ந்தது.

தென்னிலங்கையிலிருந்து இங்கு வந்திருந்த தமது இரு சிங்கள நண்பர்களுக்கு கரு

[5-ம் பக்கம் பார்க்க]

## இலவச நூல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் ஆண்டில் யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் தாபனத்தாரால் வெளியிடப்பட்டுள்ள 'பல்லும் சொல்லும்' என்ற நூலை பாடசாலைகளுக்கும், சிறுவர் கல்வி நிலையங்களுக்கும், பாலர் பாடசாலைகளுக்கும் இலவசமாகக் கொடுக்க முன் வந்துள்ளார்கள். பெற்றுக் கொள்ள விரும்பும் மேற்படி நிலையங்கள் தங்கள் பாடசாலையின் அத்தாட்சிக் கடிதத்தை கொடுத்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## ஜேர்மனில் புதிய சட்டம்

பொன், ஜூன் 24
மக்கள் அனைவருக்கும் நன்கு பயன்படக்கூடிய வகையில் ஜேர்மன் சமஸ்டிக் குடியரசில் சட்டத்துறை மாற்றியமைக்கப்படவுள்ளது. பெரும் பணம் விரயமாவதால் நியாயமான எத்தனையோ வழக்குகளைக்கூட மக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாது விட்டுவிடுகின்றார்கள்.

இப்புதிய மாற்றத்தால் வருமானம் குறைந்தவர்களுக்கு இலவசமாக சட்ட உதவி வழங்கப்படுமென்றும், வழக்குத் தீர்ப்பு எப்படி அமையும் என்ற நிச்சயமில்லாமல் பெருந் தொகையை வழக்கிற்குச் செலவு செய்ய வேண்டி விரும்பவர்கள் வழக்குத் தொகையை நான்கு வருடகாலத்தில் தவணைக் கட்டண முறையில் செலுத்துவதற்கும் ஒழுங்கு செய்யப்படும் என்றும் தெரிகிறது (கு)

## இன்றைய பலன்

ஆனிமாதம் 11-ம் திகதி
[திங்கட்கிழமை]
(25-6-1979)

மேடம் : பெற்றவும் பொருள் சேரும், மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும், திற்றிக்கும் செய்தியுடன் தேனான வாழ்வும் உண்டு.

இடபம் : உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும், பணவிவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம், தொழில் துறையில் அதிகம் கவனம் செலுத்தவும்.

மிதுனம் : பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சிபடாதிருப்பது விரும்பத்தக்கது, அவசர முடிவின்மூலம் விரோதத்தை தேடிக்கொள்ளுவீர்கள், துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவார்கள்.

கடகம் : பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது, கொடுக்கல் வாங்கல் மூலம் அதிக ஆதாயத்துக்கு இடமுண்டு, வசீகரப் பேச்சின் காரணமாக எதிரிகளையும் உங்கள் வசப்படுத்துவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

சிங்கம் : எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும், சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு, இனபந்துக்களின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடமுண்டு.

கன்னி : பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும், உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார்கள், கல்வித்துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும், இலக்கிய வட்டத்தில் சஞ்சரிப்பவர்களுக்கு இனிமையான தினம்.

துலாம் : கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும், இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள் இனசனக் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு, பிள்ளைகளின் செல்வாக்கு வளரும்.

விருச்சிகம் : மனதில் அமைதி குன்றும், எதிரிகள் எக்காளமிடுவர், மறைந்த நிலைவுகள் மீண்டும் தலைதூக்கும், அமைதியே நன்று, அறிவுக்கு நலம் உண்டு.

தனுசு : காதலருக்கு கனருசியான தினம், பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும், இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும், இன்று சுபதினம்.

மகரம் : அவசரப்போக்கினால் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்ளுவீர்கள், எதற்கெடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும், தவறான வழிமூலம் பணம் பாழாகும், முகமன் கூறுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

கும்பம் : மனம்போல் வாழ்வு இன்று மலரும், கடமையாற்றும் இடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், சிலருக்கு பதவி உயர்வுக்கும் இடமுண்டு, முயற்சியால் முன்னேற்றமுண்டு.

மீனம் : உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும், உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள், உவகை சேரும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## வியட்நாம் மீது சீனா மீண்டும் தாக்குதல்!

ஹனோய், ஜூன். 24
வியட்நாமின் எல்லைப்பிரதேசங்களில் சீனா தாக்குதல் நடத்தி வருவதாக வியட்நாம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வியட்நாமின் வடபகுதியில் சீனாவின் படைவீரர்கள் 200 பேர் இற் பீரங்கி, ரொக்கட் தாக்குதல்கள் நடாத்தியதால் ஒருவர் பலியானார் என்றும் பலர் காயமடைந்தனரென்றும் வியட்நாம் செய்திகள் தெரிவித்தன. வியட்நாமின் கடல் பிரதேசங்களிலும் சீனர் புகுந்து மாலுமிகளைத் தாக்கிவருவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்- பானுமதி
மதுரைவீரன்
(புதிய பிரதி)

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
நூற்றுக்கு நூறு

கொட்டகை நிறைந்த 3-வது வாரம்
REGAL Daily at 2-00. 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m;
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால் அனுமதிக்கப்படுவர்.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30 6-30 & 9-45
ஊட்டிவரை உறவு
ஈஸ்ட்மன்கலர்
29ந் திகதி முதல் ஒளவையார்

லிடோ (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
கைகொடுத்த தெய்வம்

மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஸ்ரீவித்யா-சந்திரகலா நடித்த;
காலங்களில் அவள் வசந்தம்
(புத்தம்புதிய பிரதி)

4-வது ஜனத்திரள் வாரம்
நாளை நாளை என்று நாளைப் பின்போடாது
இன்றே கண்டு களிக்கத் தவறுதீர்கள்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
முத்துராமன் - தேவிகா கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
குறிப்பு: யாழ்நகரில் இதுவே கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.
[புதிய பிரதி]

ராஜா கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா நடித்த
ஒ ளி வி ள க் கு
புதிய பிரதி ஈஸ்மன்கலர்

26-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்) போன்: 460 தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

2-வது வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

Rio (Jaffna) Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THE ARENA
Strictly for adults. Sex Thrill.

SHANTHI JAFFNA Daily: 4 Shows
(Phone 7642) 10-30, 4-45, 7-00 & 9-30
MGM presents "SWEET REVENGE"
Scope—Color—Action Packed
—more suited for adults.—
Next! "MR. MAJESTYK" Adults only—Color
Dont miss this Action Packed Movie.


# உலக கிரிக்கட் கிண்ணம் மேற்கிந்திய கோஷ்டிக்கு

லண்டன், ஜூன். 24 மேற்கு இந்திய கிரிக்கட் கோஷ்டி உலகக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

நேற்று லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் மேற்கிந்தியக் கோஷ்டியும் இங்கிலாந்துக்கோஷ்டியும் கலந்துகொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியக்கோஷ்டி 60ஓவர்களில் 9 விக்கட்டுகளை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது. றிச்சர்ட்ஸ் 138 ஓட்டங்களையும், கொலின் கிங்ஸ் 84 ஓட்டங்களையும் பெற்றனர் 60வது ஓவரின் கடைசிப்பந்துக்கு றிச்சர்ட்ஸ் 6 ஓட்டங்களை எடுத்தது ஓட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இங்கிலாந்துக்கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 54.1 ஓவர்களில் 194 ஓட்டங்களைப் பெற்றது. மைக் பியர்லி 64 ஓட்டங்களையும், போய்கொட் 67 ஓட்டங்களையும் பெற்றனர்.

92 ஓட்டங்களால் இங்கிலாந்துக்கோஷ்டியை தோற்கடித்த மேற்கிந்தியக்கோஷ்டி இரண்டாவது முறையாக உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. சிறந்த வீரருக்கான பரிசை றிச்சர்ட்ஸ் பெற்றுக்கொண்டார்.

உலகக் கிண்ண கிரிக்கட் போட்டியில் கலந்துகொண்ட இலங்கைக்கோஷ்டி சர்வதேச கிரிக்கட் ஊளப்பின் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது குறிப்பிடத்தக்கது. [கு]

## 'டுவிஸ்ற்' வீரருக்குப் பாராட்டு

[மாவிட்டபுரம்]

'டுவிஸ்ட்' ஆட்டத்தில் உலக சாதனையை ஏற்படுத்தியுள்ள காங்கேசன்துறையைச் சேர்ந்த வின்சன்ற் சோச்கில் ஜான்ஸ் என்னும் 21 வயது இளைஞருக்கு காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வெள்ளி விழா அரங்கில் பாராட்டுவிழா நடைபெற்றது.

சிமெந்துத் தொழிற்சாலை, காங்கேசன்துறை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகம், தெல்லிப்பழை லயன் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த 'டுவிஸ்ற்' ஆட்டத்தில் கடந்த 30ம் திகதி பகல் 10 மணிக்கு ஈடுபடத் தொடங்கிய இவ் இளைஞர் புதன்கிழமை மாலை 177 மணித்தியாலத்தில் தமது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டார். அவர் தொடர்ந்து சில தினங்கள் ஆடவிருந்தபோதும் டாக்டர் ரி. இராசேந்திரத்தின் ஆலோசனையின் பேரில் ஆட்டத்தைக் கைவிட்டார்.

கடந்த டுவிஸ்ட் ஆட்டங்களில் ஆனந்தன் 114 மணி. செனிவரத்தினு 128 மணி. ஜனுப் நசீர் 136 மணி. இராமச்சந்திரன் 139 மணி. சண்முகநாதன் 144 மணி. செல்வம் 160 மணி. இறுதியாக வின்சன்ற் 177 மணி நேரம் ஆடி சாதனை ஏற்படுத்தியுள்ளார். [க]

## ஜனாதிபதியுடன் செல்லத்தம்பு

[கொழும்பு]

மூதூர்த்தீவு பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். எம். செல்லத்தம்பு கடந்தவாரம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் காரில் பாராளுமன்றத்துக்குவந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவரை ஜனாதிபதி அவர்கள் காரில் கொண்டுவந்து பாராளுமன்றக் கட்டிடத்திற்கருகாமையில் இறக்கிவிட்டுப்போனது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்திவிட்டது.

பாராளுமன்றத்துக்கு தாம் வந்துகொண்டிருந்தபோது அவ்வழியால் காரில் வந்துகொண்டிருந்த ஜனாதிபதி அவர்கள் காரை நிறுத்தி தம்மை எங்கே போகிறீர்கள் என்று கேட்டதாகவும் 'பாராளுமன்றத்துக்கு' என்று கூறவே காரில் ஏற்றிக்கொண்டு வந்து இறக்கிவிட்டுப்போனதாகவும் திரு. செல்லத்தம்பு இதுபற்றி பின்னர் கூறினார். [ம]

## ரயிலில்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வாடு வாங்குவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பகல் 12-20 கடுகதி ரயிலில் சென்ற இவர் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் ரயில் நின்றபோது கீழே இறங்கி மீண்டும் ரயில் புறப்பட்டபோது ஏறமுயன்ற சமயமே தவறி விழுந்தாராம்.

மரணவிசாரணையில் விபத்து மரணமென தீர்ப்புவழங்கப்பட்டது. [கொ]

## புதிய சமாதான நீதிபதி

[யாழ்ப்பாணம்]

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த திரு சிவகுரு கந்தசாமி சாவகச்சேரி நீதிபதி திரு கே பாலகிட்டிணர் முன்னிலையில் சமாதான நீதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இப்பாறிய தலைமையாசிரியரான இவர் 1984ம் ஆண்டு மட்டுவில் வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தை ஸ்தாபித்த காரியதரிசியாக கடமையாற்றினர். 1943 ம் ஆண்டு மட்டுவில் ப நோ கூ சங்கத்தின் செயலாளராகவும் பின் தலைவராகவும் கடமையாற்றினர்.

தென்மராட்சி யூனியன் இயக்குனர் சபையில் கடமையாற்றிய இவர் பருத்தித்துறை சோமஸ்கந்தா கல்லூரியில் உதவி ஆசிரியராகவும் வாதரவத்தை வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றினர். [க]

## சிறுர்களின் திறனறிய விழாக்கள் உதவும்

[நெல்லியடி]

"இளம் சிறுர்களை உற்சாகப்படுத்துவதன் மூலமே அவர்களை முன்னேற்றகரமான பாதைக்கு அழைத்துச் செல்லமுடியும். ஆகவே பெற்றோர்களும் ஆசிரியர்களும் சிறுர்களான மாணவர்களை உற்சாகப்படுத்தி அவர்களை நல்ல நிலைக்கு எடுத்துவர வேண்டும்."

மேற்கண்டவாறு ஆவரங்கால் நடராஜா வித்தியாசாலையில் உலக சிறுவர் தின விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட கண்காட்சியைத் திறந்துவைத்து உரையாற்றிய கோப்பாய் கல்வி வட்டாரக் கல்வியதிகாரி திரு ஆ. தங்கராசா குறிப்பிட்டார் மேலும் அவர் பேசுகையில் "சிறுவர்தின விழாக்களைக் கொண்டாடுவதன் மூலம் சிறுர்களின் தனிப்பட்ட திறமைகளை அறிந்து கொள்ள முடியும். அவரவருக்குள்ள திறமைகளை அறிந்து அந்த வழிகளில் மாணவர்களை எடுத்துச் செல்லவேண்டியது ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் கடமையாகும்" என்ருர். [க]

## சம்மேளனம் கூடுகிறது

[சித்தன்கேணி]

வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் காரைநகர் இந்துக்கல்லூரியில் நடைபெற இருக்கின்றது. பிரதம விருந்தினராக வட்டு எம் பி திரு தா திருநாவுக்கரசு கலந்து கொள்வார். [அ]

## நீலங்காட்டில் 40 வீடுகள்

[சித்தன்கேணி]

காரைநகர் நீலங்காடு கிராமத்தில் 40 வீடுகள் அமைப்பதற்கேற்ற நடவடிக்கையை வீடமைப்புத் திணைக்களம் மேற்கொண்டிருக்கின்றது.

வட்டு எம். பி. காரைநகர் நீலங்காடு கிராமமக்களின் வேண்டுகோளுக்கிணங்க நீலங்காடு கிராமத்தை நவீன கிராமமாக்குவதற்கு முதற்கட்டவேலையாக வீடமைப்பு திணைக்களத்துக்கு 40 வீடுகளை அமைத்துத்தருமாறு கேட்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [அ]

## இவ்வாலயத்தில் அமைதியாகத் திருவிழா நடக்கும்

[மாவிட்டபுரம்]

மயிலிட்டிப்பகுதியில் நிலவிவரும் பதற்றநிலை காரணமாக மயிலிட்டி கண்ணகையம்மன் கோவில் உற்சவத்தை நிறுத்த எடுத்த தீர்மானம் சைவப் பெரியார்களது தலையீட்டினுல் மாற்றப்பட்டு அமைதியான முறையில் உற்சவத்தைநடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

மயிலிட்டிப் பகுதியிலிருந்து வரும் பதற்றநிலை காரணமாக இவ்வாலய உற்சவகாலத்தில் மக்கள் கூடும்போது அசம்பாவித சம்பவங்கள் ஏற்படக்கூடுமெனக்கருதி ஆலயபரிபாலன சபை இவ்வருட உற்சவத்தை நிறுத்துவதென முடிவுசெய்திருந்தது.

ஆனல் ஆலய உற்சவத்தை திடீரென இம்முறை நிறுத்துவது சரியல்லவென்றும் பெரிய அளவில் செய்யாதுவிட்டாலும் அமைதியான முறையில் உற்சவத்தை நடத்துவதே நல்லதெனவும் பலசைவ பெரியார்கள் ஆலயபரிபாலனசபையினருக்குத் தெரிவித்ததையடுத்து இவ்வருட உற்சவத்தை அமைதியான முறையில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது

உற்சவ காலத்தில் ஆலய சுற்றுடலில் பொலிஸ் ரோந்து நடவடிக்கையும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. [அ]

## அத்துளுநீர் விநியோகத்தில் தடை!

[உடுப்பிட்டி]

கரவெட்டிப் பகுதியில் 10,000க்கு மேற்பட்ட மக்களின் தண்ணீர்த் தாகத்தைத் தீர்த்துவைக்கும் அத்துளுக் குழாய்நீர் விநியோகத்திட்டத்தில் உள்ள இயந்திரமொன்று பழுதடைந்துள்ளதால் இக் குழாய்நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது

இதனுல் இப்பகுதிமக்கள் தண்ணீரின்றி பெருங்கஷ்டமும் சிரமமும் அடைந்து வருகின்றனர்.

# லயனல் பெர்ணண்டோவுக்கு யாழ். மாநகரசபை வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

"யாழ்ப்பாண அரசாங்க அதிபராக நீங்கள் பதவி வகித்த காலத்தில் நீங்கள் வெளிப்படுத்திய அறிவும் உணர்வும் ஒன்றிணைந்த அபூர்வமான சிறப்பியல்புகளை யாழ்ப்பாண வாசிகளான நாம் இங்கு விவரணமாக எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்கும் நீங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த காலத்து நினைவுகள் மறக்கமுடியாதவை என்பதுடன் தங்கள் நடவடிக்கை ஒவ்வொன்றும் யாழ்ப்பாணத்தில் வதியும் மக்கள் அனைவரது உள்ளங்களிலும் அழியாத முத்திரையாகப் பதிந்துள்ளன.''

இவ்வாறு யாழ்ப்பாண மாநகரசபையினால் முன்னைநாள் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோவுக்கு நேற்று அளிக்கப்பட்ட வரவேற்பில் யாழ் மாநகரசபை முதல்வரும் மற்றும் 22 உறுப்பினர்களும் வாசித்தளித்த பிரவுபசாரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பிரிவுபசாரப் பத்திரத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"கணிப்பில் உயர்ந்தோங்கி நிற்கும் தங்கள் தலைமைப்பண்புகளாலும், நட்பாலும், அச்சமில்லாமலும், தயைகாட்டாமலும், வேண்டப்படாத சம்பந்தமற்ற சக்திகளுக்கு வளைந்துகொடுக்காது தங்களது காத்திரமான பொறுப்புமிக்க கடமைகளை நிறைவேற்றுவதில் தாங்கள் காட்டிய அஞ்சாமையாலும், எம்முடன் வாழ்ந்த சொற்பகாலத்திலேதானே எங்கள் பிரியத்திற்கு உரியவராகிவிட்டீர்கள். அரசாங்கத்தின் கீழான தங்களது சேவையின் வரலாற்றில் சிறப்பு அம்சமாக மிளிர்வது மக்களினதும் இந்நாட்டு அரசாங்கத்தினதும் முன்னேற்றத்திற்கான தங்கள் ஈடுபாடும் அர்ப்பணிப்புமாகும்.

"ஒரு மாவட்ட இறைவரி உத்தியோகத்தராக இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்துகொண்ட தாங்கள் அடுத்து உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் உதவிச்செயலாளராகவும், ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபையின் பொது முகாமையாளராகவும், கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளராகவும் அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும், பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் அதன்பின் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபராகவும் சேவையாற்றியுள்ளீர்கள். பட்டப் படிப்பிற்குப் பின்னரும் தாங்கள் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் ஒரு பயிற்சிநெறியைத் தொடர்ந்ததன் மூலமாகவும் தங்களுக்கு அணிசேர்த்துக் கொண்டீர்கள், தங்களின் அபூர்வ கற்பனாசக்தியாலும் புதுமைப்போக்காலும் தங்கள் பணிமீதுகொண்ட ஈடுபாட்டாலும் இத்தொழில் துறைகள் அனைத்திலும் தங்கள் தனித்துவமான முத்திரையைப் பொறித்துள்ளீர்கள்.

யாழ்ப்பாண நகரின் குடிமக்கள் சார்பிலும், எங்கள் சார்பிலும் தங்கள் உடல்நலனுக்காகவும் இதுவரைகாலமும் தாங்கள் மிகுந்த பக்தி வைராக்கியத்துடன் விடுவிக்க முடியாதளவிற்குத் தங்களைப் பிணைத்துக்கொண்டுள்ள தங்களின் நாட்டுக்கு நீடித்து சேவையாற்றவேண்டுமென்றும் இறைஞ்சுகின்றோம்.'' [கெ]

# காணி விநியோகம் இடைநிறுத்தப்பட்டது

[நெல்லியடி]

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 1000 ஏக்கர் நிலம் காணியற்றவர்களுக்கு வழங்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் பொறுப்பேற்கப்பட்ட இந்த 1000 ஏக்கர் நிலத்தினை காணியற்றவர்களுக்கு வழங்க யாழ்ப்பாண மாவட்ட அமைச்சு எடுத்துவந்த நடவடிக்கைகள் காணியமைச்சின் திடீர் உத்தரவொன்றினை அடுத்து தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாம்.

மேற்படி காணிகளைப் பெற விண்ணப்பித்திருந்தவர்களுக்கு அவ்வப்பகுதி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் நேர்முகப்பரீட்சைகளும் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தர்மகர்த்தாசபை ஆலோசனைக் கூட்டம்

[வேலணை]

நயினாதீவு நாகபூசணி அம்பாள் வருடாந்த உற்சவத்தையொட்டி ஆலோசனைக் கூட்டம் ஒன்று யாழ் பொதுசன தொடர்பு அதிகாரி திரு. எஸ் சண்முகலிங்கம் தலைமையில் நயினாதீவு தர்மகர்த்தாசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வாலோசனைக் கூட்டத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தம்பிமுத்து, ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. எம். ஐயாத்துரை, சுகாதாரவைத்திய அதிகாரி, எம் சிவராஜா, இ. போ. ச. உயர்அதிகாரிகள், வள்ள உரிமையாளர்கள் நயினாதீவு வடக்கு, கிழக்கு கிராமசேவகர்கள், எவ். இவப்பிரகாசம். செ. சச்சிதானந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வழமைபோல் இம்முறையும் மேற்கு வீதியிலேயே சுகாதாரவைத்திய நிலையம், பொலிஸ்நிலையம், நீதிமன்றம் முதலுதவிநிலையம் போன்றவற்றை நிறுவுவதென்றும் சம்பறத்திருவிழா விருந்து தெப்பத்திருவிழாவரை விசேடபஸ். வள்ளச்சேவைகளை நடாத்துவதென்றும் இறுதி பத்துத்தினங்களும் அமுதசுரபியில் அன்னதானம் வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

குறிகட்டுவான், இறுப்பிட்டி ஆகியதுறைகளிலிருந்து நயினாதீவுக்கான வள்ளக் கட்டணத்தை ஒரு ரூபாவில் இருந்து 125 சதமாக உயர்த்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஏழு பிள்ளைகளின் தாயும் வாலிபரும் தற்கொலை

(நெல்லியடி)

இருவருக்கிடையே ஏற்பட்ட காதல் தொடர்பு அம்பலமானதைத் தொடர்ந்து காதலனும் காதலியும் ஒன்றாக நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்கள்?

இப் பரபரப்பூட்டும் சம்பவம் துன்னாலை தெற்குப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் ஏழு பிள்ளைகளின் தாயான திருமதி சின்னத்துரையும் வாலிபரான முருகேசுவுமே மாண்டவர்களாவர்.

காலஞ்சென்ற பெண்ணின் குடும்பத்திற்குச் சொந்தமான உழவுயந்திரத்தினை செலுத்தி வந்த சாரதியான முருகேசுவிற்கும், மேற்படி பெண்ணிற்கும் இடையேயுள்ள காதல் அம்பலமானதைத் தொடர்ந்தே இவர்கள் தற்கொலைசெய்துகொண்டதாக விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

பெண்ணின் வீட்டிற்கு அண்மையிலுள்ள காணி யொன்றில் இவ்விருவரும் அணைத்தபடி இறந்திருக்கக் காணப்பட்டார்கள்.

சுமார் 40 வயது மதிக்கத்தக்க காலஞ்சென்ற பெண்ணும், 20 வயது மதிக்கத்தக்க காலஞ்சென்ற வாலிபரும் காதலித்து தற்கொலை செய்துகொண்டமை இப்பகுதி மக்களைப் பெரிதும் ஆச்சரியத்திற்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது. இம் மரணங்கள் தொடர்பான விசாரணைகளை வடமராட்சிப் பகுதி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் நடாத்தினர்.

# மின்சாரம் தாக்கி மரணம்: யாழ். மாநகரசபை மீது கண்டனம்

[யாழ்ப்பாணம்]

வேலை முடிந்து வீட்டுக்குச் சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தை மின்சாரம் தாக்கி ஸ்தலத்திலேயே மரணமானார் இப்பரிதாபச் சம்பவம் நேற்று முன்தினம் மானிப்பாய் வீதியிலுள்ள ஜின்னா சந்தியில் நடைபெற்றது.

நாவாந்துறையைச் சேர்ந்த நிக்கிலஸ் பிரான்சிஸ் [41 வயது] நேற்று முன்தினம் மாலை வேலை முடிந்து வீட்டிற்கு திரும்பிக்கொண்டிருந்த போது திடீர் என்று பெய்த மழையினாலும் புயலினாலும் பாதிக்கப்பட்டு வீதியில் அறுந்துகிடந்த மின்கம்பியினால் தாக்கப்பட்டு மரணமானார். பதில் நீதிபதியும் மரண விசாரணை அதிகாரியுமான திரு எஸ் எஸ் பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினார். மரண விசாரணையின்போது யாழ் மாநகரசபை மின்சாரப் பகுதி உத்தியோகத்தர் திரு. பரமசோதி சாட்சியமளிக்கையில், "சம்பவம் நடைபெற்ற நேரம் புயல்வீசியதாகவும், புயலினால் பனைமரம் ஒன்றின் இலை முறிந்து மின் கம்பியில் விழுந்ததாகவும், அதனால் மின்கம்பி அறுந்ததாகவும் அக்கம்பியில் அகப்பட்டு தாக்குண்டு மரணமானார் என்றும் தெரிவித்தார்

மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் எஸ் பிரான்சிஸ் தீர்ப்பளித்து கருத்து வெளியிடுகையில், மின்கம்பத்திற்கு மேலாக வளர்ந்திருக்கும் மரங்களை வெட்டவேண்டியது மின்சாரப்பகுதியினரது கடமையென்றும் தமது கடமையைச் சரிவரச் செய்யத் தவறியதால் ஒரு ஏழை அநியாயமான முறையில் இறந்துள்ளார் என்றும் நாட்டின் முக்கிய தேவையான மின்சாரத்தில் கூடக் கவனம் செலுத்த முடியாத மாநகரசபை உறுப்பினர்கள், கிலைகளை அகற்றுவதிலும விளையாட்டு மைதானத்தினதும வீதிகளினதும பெயர் பலகைகளின் பெயர்களை மாற்றுவதிலும முன்னிற்பது கவலைக்கிடம அளிப்பதாகவுள்ளதென்றும் இனிமேலாவது இதுபோன்ற கேலிக்கிடமான வேலைகளை விட்டு, நாட்டின் முன்னேற்றத்திலும் அபிவிருத்தியிலும் அக்கறை காட்டி இனிமேலாவது இது போன்ற விபத்துக்கள் ஏற்படாது பாதுகாக்கவேண்டுமென்றும தெரிவித்து, மின்சாரம தாக்கியதால் மரணம சம்பவித்துள்ளதாகத் தீர்ப்பு வழங்கினார். (கொ)

## சந்தேகநபர்கள்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

முறுத்தியதாகவும் மூன்றும் எதிரி பெரியதம்பிசத்தமிட்டால் கத்தியால் குத்தப்படுவீர் என்றும் பயமுறுத்தியவரென்றும் தெரிவித்தார்.

அடையாள அணிவகுப்பின் பின்னர் சந்தேக நபர்கள் மூவரும் யாழ் நீதிமன்ற நீதிபதி விமல் சேனநாயக்கா முன் ஆஜர் செய்யப்பட்டபோது மூவரையும் பாதுகாப்பில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

மூன்றும் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி, மூன்றும் எதிரியின் சகோதரிக்கு திருமணம் நடைபெற இருப்பதாகவும்மூன்றும் எதிரி ரவீந்திரன் மாப்பிளைத் தோழனாக இருக்க வேண்டியிருப்பதனால் அவரைப் பிணையில் விடும்படியும்வாதாடினார். மூன்றும் எதிரியை ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி தினமும் காலை 9 மணிக்குப் பொலிசில் கையெழுத்து வைக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டுத் தீர்ப்பு வழங்கினார். (கொ)

சுன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்
(வரையுள்ளது)
சுன்னாகம்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், சொரி நல்லெண்ணெய், கழிவு மா ஆகியனவும் கேள்விப்பத்திரம்மூலம் விற்பனைக்கிருக்கின்றன. வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-ம் ஏனையவற்றுக்கு ரூபா 50/-ம் மிளளிப்பு வைப்புப்பணமாகச் செலுத்தி, காரியாலயவேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் யாவும் 29-6-79 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்.

23-6-1979. 2861

# 4 வருடங்களின் பின் மீட்கப்பட்ட பெண்!

(உடுப்பிட்டி)

நான்கு வருடங்களுக்கு முன்னர் பெற்றோரை மறந்து தான் விரும்பியவருடன் மாயமாக மறைந்த இளம் பெண் துன்னாலை தெற்கில் வைத்து மீட்கப்பட்டார்.

உடுத்துறையைச் சேர்ந்த அப்புக்குட்டி சிவக்கொழுந்து என்னும் 19 வயது இளம் பெண்ணே இவ்வாறு காணாமல் போயிருந்தவராவார்.

இவ்விளம் பெண் 15 வயதில் காணாமல் போயிருந்தார். இவர் நம்பிச் சென்றவரால் கைவிடப்பட்டு நிராதரவான நிலையில் நான்கு வருட காலமாக அலைந்து திரிந்தாராம். இவர் கொடிகாமத்திற்குக் கூலி வேலை செய்யச் சென்றிருந்த துன்னாலை தெற்கைச் சேர்ந்த பெண்களிடம் தனது சோகக் கதையைக் கூற அவர்களுடன் துன்னாலை தெற்குக்கு வந்தாராம்.

பிரஸ்தாப பெண்ணைப் பற்றித் துன்னாலை தெற்குக் கிராமசேவை அலுவலர் திரு. திரு. செ, அ. ஞானச்சந்திரனிடம் தகவல் தெரிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து அவர் விசாரணை மேற்கொண்ட போது இவர் பற்றிய விபரங்கள் வெளியாகின.

இதனைத் தொடர்ந்து உடுத்துறையில் இருக்கும் அவரது பெற்றோரை அழைத்து அவர்களிடம் பிரிந்து போயிருந்த மகளை கிராமசேவை அலுவலர் ஒப்படைத்தார். தமது அனந்தக் கண்ணீர் சொரிய அழைத்துச் சென்றனர். பெற்றோரையும் மகளையும் கிராம சேவை அலுவலர் வழியனுப்பி வைத்தார். (அ)

## மக்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் செயலக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

திரு. லயனல் பெர்ணண்டோ தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"மனிதர்கள் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் இறுதியில் அவர்களது மனிதத்தன்மையே நிலைத்து நிற்கிறது. நான் ஒரு அரசாங்க உத்தியோகத்தனாக இருந்து மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் உணர்ந்து சேவை செய்ததனால் தான் தமிழ்மக்கள் என்மீது அன்பு பாராட்டியுள்ளார்கள். நான் யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வந்தபோது தமிழர்கள் வீட்டில் உணவருந்த வேண்டாம் என்றும், போகும் இடத்தை அறிவிக்கவேண்டாம் என்றும் என்மீது அன்பு கொண்ட தமிழ் நண்பர் ஒருவர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். நான் எனது நண்பனின் வேண்டுகோளுக்கு மாறாக திறந்த மனத்துடன் தமிழ் மக்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தேன், சேவை செய்தேன். அதனால் தமிழ் மக்கள் என்மீது நம்பிக்கை கொண்டு என்மீது அன்பு பாராட்டினார்கள். இவ்வாறு ஒவ்வொரு அரச ஊழியரும் சேவை செய்தால் மக்களின் அன்பைப் பெறமுடியும்.

"நான் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்றாலும் யாழ்ப்பாண மக்களின் இனிய நினைவுகள் என்றும் என் உள்ளத்தை விட்டு அகலமாட்டாது உங்களது இனிய நினைவுடன் தென் இலங்கைக்குச் செல்கிறேன்'' என்று கூறினார்

நல்லூர் எம் பி திரு எம். சிவசிதம்பரம் பேசுகையில், அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசியல் வாதிகளாக மாறக்கூடாது அந்த வகையில் திரு லயனல் பெர்ணண்டோ உண்மையான அரசாங்க உத்தியோகத்தனாக இருந்து மக்களுக்குத் தொண்டாற்றினார் அவருடைய சேவைக்கு ஒத்தாசையாக அவரது மனைவியும் இருந்துள்ளார்.

மீண்டும் ஒரு இனக்கலவரம் யாழ்ப்பாணத்தில் ஏற்படுமோ என்று யாழ்ப்பாண மக்கள் பீதிகொண்டிருந்தவேளையில் தமிழ் மக்களின் பீதியைப் போக்கி அவர்களைப் பாதுகாத்தவர் திரு. லயனல் பெர்ணண்டோ, அதனால்தான் தமிழ் மக்கள் அவர்மீது அன்புபாராட்டினர்'' என்றார்.

ஆணையாளர் திரு. கே. சிவஞானம், மாநகரசபை உறுப்பினர்கள் திருவாளர்கள சேவியர், டாக்டர் ஏபிரகாம்.எஸ். தியாகராசா ஆகியோரும்பேசினர். [கொ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under NoQB/8945/78 The Eelanaadu P B No: 49; Telegrams: Eelanaadu Tel: 389.